கருவூலம் தாலூகா தலைமை பீடத்தில் இருப்பதும் கூடுமானவரையில் சப் தாலூக்காக்களில் கரூவூலங்கள் அமைக்கவும் முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. பலவிடங்களில் அப்படி கருவூலங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

திரு டி. மார்டின் : இப்படி ரெவின்யூ அடிப்படையில் தாலூக்காக்கள் அமைக்காமல் சிவில் சப்ளைஸ் மூலம் அதிகப்படியான வேலை இருப்பதால் அந்த அடிப்படையில் தாலூக்காக்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சிவில் சப்ளைஸ் என்பது நிரந்தரமானதல்ல. இன்று ரேஷன் இருக்கிறது. குடும்பக் கார்டுகள் இருக்கின்றன. ஆனல் ஒரு நிலைமை ஏற்படுமானல், எங்குமே ரேஷன் தேவையில்லை என்றதொரு நிலை ஏற்படுமானல், எந்தயிடத்திலும் குடும்பக் கார்ட் முறை தேவையில்லை என்ற நிலை வருமானல் ஒரு வினடிகூட தாமதம் ஏற்படாமல் இந்த சிவில் சப்ளைஸ் இலாகா கலைத்து விடப்படும் ஆகவே, நிரந்தரமற்ற ஒன்றை பின்பற்றி நிரந்தரமாக இருக்கிற ஒரு காரியத்தில் ஈடுபடுவது அவ்வளவு சரியானதல்ல.

Collections during Kalakshepams.

***455 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal to bring the collections made during Kalakshepams under the purview of the Entertainment Tax Act, 1939 ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கும் உத்தேசம் ஒன்றுமில்லை.

திரு என். எஸ். வி. சித்தன் : கோவில்களைத் தவிர பிறயிடங்களில் நடத்தப்படுகிற காலட்சேபங்களுக்கு பெரிய தொகை வசூலிக்கப்படுகிறது. எனவே 1939-ம் ஆண்டு பொழுதுபோக்கு வரிச் சட்டத்தின்கீழ் காலட்சேபங் களில் வரும் வசூலுக்கு வரி விதிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு ஒரு கணிச மான தொகை வருவாயாகக் கிடைக்கும் அல்லவா ? அப்படி இதுவரை யில்லாமலிருந்தாலும் இனியாவது அதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கத்திற்கு வருவாய் அதிகம் கிடைக்கும் காரியத்தில் உறுப்பினர் அவர்களுக்குள்ள அக்கறையை நான் பாராட்டுகிறேன். அதற்கு நன்றியும் செலுத்துகிறேன். ஆனல் பொதுவாக இப்போது என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் சினிமாக்கொட்டகை யில் நடக்கிற சினிமாக் காட்சிகளுக்கும், அதுமாதிரி குதிரைப் பந்தயத் திற்கும் மட்டும்தான் இருக்கிறது. நாடகங்கள், டிராமாக்கள், நடனங்கள், இசைக் கச்சேரிகள், சர்க்கஸ் கம்பெனிகள், போட்டி விளையாட்டுகள் (ஸ்போர் ட்ஸ்) இப்படியெல்லாம் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் கூட நாம் என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் வசூல் செய்வதில்லை. உறுப்பினர் அவர் களின் கேள்வியின் முதல் பகுதியைப் பாராட்டுகிறேன். நல்ல யோசனை களை அவர்கள் சொல்லலாம். இப்படிப்பட்ட விதிவிலக்குகள் இருப்பதால் காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. மா. பொ. சிவஞானம் : நான் அறிந்தவரையில், காலட்சேபங் களுக்கு எங்குமே டிக்கட்ஸ் வைத்து கட்டாயமாக வசூலிக்கப்படுவதில்லை. தட்டு வசூல் மூலம் பணம் திரட்டி கோவில் திருப்பணிகள் செய்யப்படு கின்றன. ஆகவே, இந்தக் கேளிக்கை வரிச் சட்டம் அங்கே போவதற்கு வழியில்லை என்பதை அரசு ஒப்புக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புரோகிதர்கள் மற்றவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. பக்தியைப் பெருக்கிக் கொள்வதற்கும், ஆண்டவனிடம் அன்பைப் பெருக்கிக்கொள்வதற்கும் கட்டணம் வசூலிக்கிற ஒரு நிலைமையை அரசாங்கம் இன்று ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இப்போது நடைபெறுகிற காலட்சேபங்கள் வாரக்கணக்கில் ஒரு பொருட்காட்சி நடப்பது போல் 20 நாட்கள், 30 நாட்கள் என்று தொடர்ந்து ஒரு இடத்தில் நடத்தி வருகிறார்கள். அதற்காக ஏராளமாக வசூல் செய்கிறார்கள். அதே சமயத்தில் அந்த காலட்சேபங்கள் மக்களை மகிழ்விக்கிற வகையில், அதாவது கிண்டல் பண்ணுவதும், இன்னும் சொல்லப்போனால் அரசியல் நிலையில் கிண்டல் செய்து மூன்று, நான்கு மணி நேரம் என்டெர்டெயின்மெண்ட் வைத்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு இந்த வரி போடுவது நியாயந்தான் என்பதை அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து. பொழுதுபோக்கான பரத நாட்டியம், நாடகம், வேறு வகையான விளையாட்டுக்கள் மைதானங்களில் நடக்கும் விளையாட்டுக்கள், சர்க்கஸ் கம்பெனிகள் இவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். ஆகவே, அரசாங்கம் இப்போது இதற்கு வரி விதிக்க உத்தேசிப்பதாக இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தற்போது தமிழ்நாட்டில் காலட்சேபம் செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய சொந்த காலட்சேபத்தை நடத்த வருவாய் கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அத்தகையவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் சொன்னமாதிரி பெரிய காலட்சேபத்திலே லட்சாதிபதியானவர்களும், ரொம்ப பிரகாசமாக ஜெகஜோதியாக இருப்பவர்களும் இந்த அரசாங்கத்திற்கும் தெரியும்.

THIRU K. S. KOTHANDARAMAIH : These kalakshepams are not merely of entertainments ; they also improve the cultural and devotional aspects of our country. Though the Government are not giving any help to those who do kalakshepams yet private persons are giving help. The Government of Mysore, I hear, has set apart a sum for each district for improving the cultural aspects and arrange programmes at the Government level. Similarly will this Government set apart some amounts for each district ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மைசூர் மாநிலத்தில் இருக்கிற விவகாரங்கள் எனக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இவைகள் கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக மட்டும் நடைபெறுகிறது என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. மத சம்பந்தமாக, பக்தி சம்பந்தமான, சிலபேர் மட்டும் ஆதரிக்கிற கருத்துக்களும் இதில் பரப்பப்பட்டு வருகின்றன. மதச் சார்பற்ற அரசாக இருப்பதால், குறிப்பிட்ட எந்தத்மதத்திற்கும் ஒரு பாரபட்சமாக, பரிவாக நடந்து கொண்டது என்ற கெட்ட பெயரை, மதச்சார்பற்ற அரசாங்கமாக இருப்பதால் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை.

TRUTH ALONE TRIUMPHS